DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

Case No.	:	C.C No. 36 /2023
Deposition of witness	:	PW-2 (LW-2)
Name	:	பிரதீப்
Father's /Husband Name	:	சுந்தரமூர்த்தி
Village	:	திருவாடுதுறை
Taluk	:	மயிலாடுதுறை
Age	:	22
Occupation	:	

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 24th day March 2025.
Accused present. defense counsel present.

முதல் விசாரணை:–

இவ்வழக்கின் ஆஜர் எதிரி எனக்கு தெரியும். அவரும் நானும் கும்பகோணம் அரசு கல்லூரியில் படித்தோம். இந்த வழக்கில் இறந்துபோன பவுனாம்பாள் விபத்தில் காயம் ஏற்பட்டபோது மருத்துவமனைக்கு நானும், ஆஜர் எதிரியும் ஆட்டோவில் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். 4 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை மதியம் 01.00 மணிக்கு மேல் கல்லூரி முடிந்து விட்டுக்கு செல்லும்போது நானும், ஆஜர் எதிரியும் Hero Honda Splendor இருசக்கர வாகனத்தில் கல்லூரியிலிருந்து மடத்து தெரு வழியாக சென்றோம். ஆஜர் எதிரி வண்டி ஓட்டினார். நான் பின்னால் அமர்ந்திருந்தேன். ஏற்கெனவே விபத்து நடந்து கூட்டமாக இருந்தது. நாங்கள் வண்டியை நிறுத்திவிட்டு விபத்தில் காயம்பட்டவரை நான் ஓடி சென்று தூக்கினேன். எதிரே வந்த வண்டி என் மீது மோதி தலையில் காயம் ஏற்பட்டு கீழே விழுந்துவிட்டேன். அருகிலிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தார்கள். அங்கிருந்த அண்ணன் ஆட்டோவில் என்னையும், காயம்பட்ட பவுனம்பாளையும், ஆஜர் எதிரியுடன் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் விபத்தில் காயம் ஏற்பட்டதாக கூறி சிகிச்சைக்கு அனுமதித்தார்கள். 2 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அதன் பின்னிட்டு நான் வீட்டுக்கு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :

கடந்த 28.04.2024ம் தேதி மதியம் 01.00 மணியளவில் நான் கல்லூரி முடித்து கல்லூரி முடித்து வீட்டுக்கு செல்வதற்காக நானும், ஆஜர் எதிரியும் Hero Honda Splendor இருசக்கர வாகனத்தில் கல்லூரியிலிருந்து மடத்து தெரு வழியாக ஆஜர்

எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் என்னை பின்னால் உட்காரவைத்துக்கொண்டு ஓட்டி சென்று ரோட்டின் மைய பகுதியின் குறுக்கே நடந்து சென்ற பவுனாம்பாள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் இறந்த பவுனம்மாளின் இறப்பிற்கு காரணம் ஆஜர் எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரண் அடிக்காமலும் ஓட்டி சென்று பவுனம்மாள் மீது விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்போது எதிரி என்னுடன் பயின்றவர் என்பதாலும், நண்பர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.
எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை: இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./-P.Rangeswari,
Judicial Magistrate No.I,
Kumbakonam.